REGD. NO. M. 6511 ★ தனிஇதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55639

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: பங்குனி 9உ வெள்ளி (22—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 10உ சனி (23—3—57) [இதழ் 243

புதிய நாணய விகிதப்படி பத்திரிகைகள் விலை!

கல்கத்தா, மார்ச் 22—

கல்கத்தா இந்திய பத்திரிகையாளர் சங்கக்கூட்டம் ஒன்றில் பத்திரிகைகளின் விலையை ஏப்ரல் முதல் கீழ்க்கண்டவாறு புதிய நாணய (நயா பைசா) விகிதத்தில் நிர்ணயிப்பது என்று முடிவாகி யிருக்கிறதாம்.

இப்போது 1 அணா விலையுள்ளது—7 நயா பைசா.
1½ அணா விலையுள்ளது—10 நயா பைசா.
2 அணா விலையுள்ளது—13 நயா பைசா.
2½ அணா விலையுள்ளது—16 நயா பைசா.

'தமிழகம் முழுதும் பலத்துடன் விளங்குகிறது திராவிட முன்னேற்றக் கழகம்'

தமிழ் நாட்டில் புதிய மந்திரி சபை!

சென்னை, மார்ச் 21—

தமிழ் நாட்டில் புதிய மந்திரி சபை ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் - அனேகமாகப் புத்தாண்டுப் பிறப்பன்று அமைக்கப்படும் என்று தெரிய வருகிறது.

காமராசரேதான் மீண்டும் முதன் மந்திரியாவாராம்! துரதிருஷ்டவச'மான இந்தச் 'சம்பவம் நிகழப் போவதில் சந்தேகமே இல்லையாம்!

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயற்குழு முதலியன, இம்மாத இறுதியில், தேர்தல் முடிவுகளை ஆராய்வதற்காகக் கூடுகின்றனவாம்.

புதிய மத்திய சர்க்கார்

ஏப்ரல் முதற் கிழமையிலாம்!

புதுடில்லி, மார்ச் 21—

நேருவையே தலைவராகக் கொண்ட புதிய மத்திய மந்திரி சபை ஏப்ரல் முதற் கிழமையில் அமைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

மார்ச் 28-ந் தேதியுடன் இப்போதைய மக்கள்சபை கலைக்கப்படும் என்றும், மறுநாள் புதிய மக்கள்சபையின் உறுப்பினர்களைத் தேர்தல் கமிஷன் அறிவிக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

'தி. மு. கழகமும் காங்கிரசு போன்று பலம் பொருந்திய கட்சியாகும்'

'இவ்வுண்மையைத் தேர்தல் மெய்ப்பித்துவிட்டது'

'பெற்றுள்ள வாக்கு அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிப்பதானால் அதிக உறுப்பினர்களை தி. மு. க. பெறும்'

முன்னாள் சட்டசபை செயலாளர் ஆர். வி. கிருஷ்ண அய்யர் ஆய்வுரை

சென்னை, மார்ச் 22—

"மாநிலம் முழுவதிலுமாகப் பலமான ஒரு அரசியல் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்துள்ளது என்பதை நடைபெற்ற தேர்தல்கள் நிரூபித்துள்ளன.

"அது 117 அபேட்சகர்களை நிறுத்திவைத்திருந்தும் 15 பேர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் பெற்றுள்ள வாக்குகளைக் கணக்கிட்டுப் பார்த்தால், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவக்கொள்கைப்படி தி. மு. கழகத்திற்கு இன்னும் சில இடங்கள் கிடைத்திருக்கவேண்டும்.

"அவர்கள் அதிகமான இடங்களைப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினாலேயே, மக்களிடத்தில் அவர்களுக்கு அபரிமிதமான செல்வாக்கு உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது.

"எனவே இந்த நிலை, மாநிலத்தில் காங்கிரசிற்குச் சமமான பலம் வாய்ந்த ஒரு கட்சியாகத் தி. மு. கழகம் இருக்கிறது என்ற உண்மையை உணர்த்துவதாகும்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் இறுதி இலட்சியம், ஒரு சுதந்திரமான திராவிடஸ்தான் அமைப்பதுதான் என்றபோதிலும் அவர்களின் உடனடி நோக்கம் தென்னாட்டின் கோரிக்கைகளை யூனியன் சர்க்காருக்கு எடுத்துரைத்துப் போராடுவதுதான் என அவர்கள், தங்களின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சி தருவதாகும். இது விஷயத்தில், எல்லாக் கட்சிகளிடையேயும் ஒரு பொதுவான உடன்பாடு ஏற்படுவது சாத்தியமே."

—இவ்வாறு, சென்னை சட்டசபையின் முன்னாள் செயலாளரான ஆர். வி. கிருஷ்ண அய்யர், 'நடைபெற்ற தேர்தல்' என்பது பற்றி கத்தோலிக்கர் சங்கச் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டதாக 'இந்து' சென்னை 22—3—57-ம் நாள் இதழ் தெரிவிக்கிறது.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் இறங்குமுகம்!

பதிவான வாக்குகள் விபரம்

சென்னை, மார்ச் 22—

சென்னை மாநிலத்தில் நடைபெற்றத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகளில் காங்கிரஸ் பெற்ற வாக்குகளை கணக்கிட்டு பார்க்கும்போது 50 சதவிகிதத்திற்கு மேல்—அதாவது பாதிக்குமேல் காங்கிரஸ் பெறவில்லை என்பது புலனாகும்.

பதிவான வாக்குகள்: 1,16,36,902

காங்கிரஸ் பெற்றவை: 49,13,375

காங்கிரசை எதிர்த்தோர்: 67,23,525

இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு, நாட்டு மக்கள் 100-க்கு 42 பேர்கள்தான் காங்கிரசை ஆதரிக்கின்றனர் என்பதும், 58 பேர்கள் காங்கிரஸ் ஆட்சி புரிவதை விரும்பவில்லை என்பதும் புலனாகும்.

தமிழ் ஆட்சி மொழி

குழு அறிக்கை பரிசீலனை

சென்னை, மார்ச் 21—

தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி யோசனை கூற சமீபத்தில் சென்னை அரசாங்கம் நியமித்த குழு தன் அறிக்கையை சர்க்காரிடம் சமர்ப்பித்துவிட்டது. இப்பொழுது அரசாங்கம் இந்த அறிக்கையை ஆராய்ந்து வருகிறதாம்.

மேற்கு வங்கத்திலும் காங்கிரஸ் முகம் தொங்குகிறது

காங்கிரசிற்குப் பலமான எதிர்ப்பு தோன்றியுள்ள மற்றொரு மாநிலமான மேற்கு வங்கத்தில், இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள 205 முடிவுகளில் 125 இடங்கள் காங்கிரசுக்கு கிடைத்துள்ளது என்றாலும், 80 இடங்களை எதிர்ப்பாளர்கள் பெற்றுள்ளனர்.

இன்னும் 47 இடங்களுக்கு முடிவு அறிவிக்கப்படவேண்டியுள்ளது.

நடிப்பிசைப்புலவர் சென்னை வந்தார்

ஒரு மாத காலம் ஓய்வு தேவை என்கிறார் டாக்டர்

சென்னை, மார்ச் 22—

நேற்று மாலை வருவதாகயிருந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி இன்று காலை 5 மணிக்கு இரயில் மூலம் சென்னை வந்து சேர்ந்தார். அவருடன் டைரக்டர் காசிலிங்கமும் கார் டிரைவரும் வந்தனர்.

இரயில் நிலையத்திலிருந்து எல்லோரும் சிகிச்சை பெறுவதற்கு நேராக டாக்டர் துரைசாமி அவர்களிடம் சென்றனர்.

நடிப்பிசைப் புலவர் 'எக்ஸ்ரே' எடுத்துக்கொண்டார். உள்காயம் சிறிதளவு ஏற்பட்டிருப்பதாகவும் தொடர்ந்து ஒருமாத காலம் முழு ஓய்வுபெற்று சிகிச்சை பெற்றால் குணமடைந்து விடுவார் என்றும் டாக்டர் அறிவித்தார்.

டைரக்டர் காசிலிங்கத்திற்குக் காலில் காயமேற்பட்டிருக்கிறது; ஒருவார காலத்தில் குணமடைந்துவிடுவார் என்றும், டிரைவர் போலீஸ் பாதுகாப்புடன் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் இரயில் நிலையத்திற்குச் சென்று நடிப்பிசைப் புலவரை அழைத்து வந்து உடனிருந்த தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தெரிவித்துள்ளார்.

கழகம் ஈட்டிய வெற்றிகள்

காரணம் கண்டுபிடித்துவிட்டார் காமராசர்

"தி. மு. கழகம் பெற்றுள்ள செல்வாக்கு நிலையானது என்றே காமராசரும் கருதுகிறார்.

"ஆனால், தி. மு. கழகம் பெற்ற சுமார் 15,53,434 வாக்குகளும் எந்தக் கொள்கைகளையும் ஆதரித்துப் போடப்பட்டவை அல்ல; ஆனால், காங்கிரசுக்கு எதிர்ப்பான ஓட்டுகள்தாம் அவை; காங்கிரசல்லாத மற்றக் கட்சிகளைவிட தி. மு. கழகம் அந்தப் பகுதிகளில், அதிகமான பலம்வாய்ந்ததாக இருந்தமையால், காங்கிரஸ் எதிர்ப்பு வாக்குகளைச் சேகரித்துக் கொண்டது என்றும் காமராசர் கூறுகிறார்."

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்' சென்னை: 21—3—57.

கேரளத்தில் காங்கிரசுக்கு சமாதி!

கேரள மாநிலத்தில், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்திற்கு சமாதி கட்டப்பட்டுவிட்டது.

நேற்று வெளியான இறுதியான தேர்தல் முடிவுகளின்படி கம்யூனிஸ்டுகள் 59 இடங்களையும், காங்கிரஸ் 42; பி. சோ. 9; முஸ்லிம் லீக் 8; சுயேச்சை 8 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

8 சுயேச்சைகளில் 5 பேர் கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பதாகத் தெரிவித்திருப்பதால், அங்குகம்யூனிஸ்டு கட்சிதான் தனியொரு கட்சியாக மந்திரிசபை அமைக்கும் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்கிறது.

அங்கு கம்யூனிஸ்டுகளே சர்க்கார் அமைப்பர் என்பது சர்வநிச்சயமாகிவிட்டதுடன், காங்கிரசுக்கும் சமாதிகட்டப்படுகிறது!

ஒரிசாவில் காங்கிரஸ் மண் கவ்விற்று!

சென்னை, மார்ச் 22—

ஒரிசா மாநில சட்டசபைக்கான எல்லா முடிவுகளும் வெளியாகிவிட்டன.

மொத்தம் உள்ள 140 இடங்களில் காங்கிரஸ் 56 இடங்கள் மட்டுமே பெற்றிருக்கிறது.

எதிர்க் கட்சிகள் 84 இடங்களில் காங்கிரசை முறியடித்துள்ளன.

எதிர்க் கட்சிகளில் கம்யூனிஸ்டு கட்சி 9; பி. சோ. 11; சார்கந்த் 5; சோஷலிஸ்டு 1; கனதந்திர பரிஷத் 51 இடங்கள் ஆக 84 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

திருச்சியில் நெசவாளர் வேலை நிறுத்தம்

27 கெச உற்பத்திக்கு நெசவாளருக்கு ரூ. 1-8-0, சரிகை நெசவாளருக்கு 4 அணா, ரீலர்களுக்கு 2 அணா ஆக மாதம் ரூ. 4-8-0 கூலியம் குறைக்கப்பட்டதால் கடந்த 18-ந்தேதி முதல் திருச்சியில் நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 22—3—57 வெள்ளி

அல்லலை அதிகமாக்கும் திட்டம்

★

இந்தியப் பேரரசு இதுவரை போட்டுவந்த வரவு-செலவுத் திட்டங்களின் காரணமாக, நாட்டு மக்களின் வருவாய் கூடிவிடவில்லை. அதன் பலனாக வாழ்வும் வளம் பெற்றுவிடவில்லை.

ஆனால் அதற்கு மாறாக, உணவுப் பொருள்களின் விளைச்சல் குறைந்து விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகிறது. குறைந்த வருமானக்காரர்களுக்கு வாழ்க்கையே பெருஞ் சுமையாகப் போய்விட்டிருக்கிறது.

வேலையற்றுத் தவிப்போர் தொகை நாளுக்குநாள் கூடி வருகிறதேயல்லாது கணிசமாகக் குறைந்துவிடவில்லை. இந்த இலட்சணத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுவிட்டிருக்கிறதாகச் சொல்லிக் கொள்ளவும்படுகிறது.

வழக்கம்போல் இந்த ஆண்டும் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறது இந்தியப் பேரரசு. 1957—58-ம் ஆண்டிற்கான தற்காலிக வரவு-செலவுத் திட்டமாகத் தரப்பட்டிருக்கும் திட்டத்தில் வரவைவிட ரூ. 365 கோடி அதிகச் செலவாகும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்பெருந் தொகைச் செலவு எந்தவகையில் ஈடுசெய்யப்பட இருக்கிறது என்பதை நிதி அமைச்சர் இப்பொழுது குறிப்பிடவில்லை. அடுத்து கூடவிருக்கும் புதிய மக்கள் சபையில் அதற்கான வழிவகைகளைக் காணப்போவதாக நிதி அமைச்சர் கூறியிருப்பதுடன், இந்தத் தற்காலிகத் திட்டம் தரப்பட்டு இருக்கிறது.

ஈடுசெய்ய முடியாது விடப்பட்டிருக்கும் இப்பெருந் தொகையான ரூ. 365 கோடி அதிகச் செலவும், மேலும் கூடுதலாக இருந்திருக்கும். ஆனால் நிதி அமைச்சரோ, இன்றுள்ள வரிவிகித அடிப்படையிலேயே மேலும் மிகுதியாக ரூ. 100 கோடி வருமானம் வரக்கூடும் என்ற நம்பிக்கையில், ஈடுசெய்யாது விட்டுவிட்ட செலவுத் தொகையைக் குறைத்துக்காட்டி இருக்கின்றார்.

அதுவுமன்றி, திட்ட வேலைகளை நடத்திவைப்பதற்கு உள்நாட்டில் கடன் எழுப்பக்கூடிய ரூ. 100 கோடி, சிறு சேமிப்பு மூலம் ரூ. 80 கோடி, வெளிநாட்டு உதவி மூலம் ரூ. 135 கோடி, மற்றவகைகளில் ரூ.119 கோடி எனக் கணக்கிட்டு, ஈடுசெய்யமுடியாத செலவுத் தொகையை ரூ. 365 ஆகக் குறைத்துக் காட்டி இருக்கிறார் நிதி அமைச்சர்.

நிதி அமைச்சர் எதிர்பார்க்கின்றபடி இன்று வரி விகிதங்களின் வருமானம் மேலும் கூடவில்லையானாலும், சிறு சேமிப்பு குறைந்தாலும், வெளிநாட்டு உதவி தடைபட்டாலும், நிதி அமைச்சர் எதிர்பார்ப்பதைவிட, பற்றுக்குறை மேலும் கூடுதலாகி விடுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

வரவைவிட அதிகச் செலவாக உள்ள ரூ. 365 கோடியில் கணிசமான தொகையை, புது வரிகள் மூலம் ஈடு செய்யப்படும் என எதிர்பார்க்கலாம். அத்துடன், புதிய நோட்டுகளை மேலும் அரசாங்கம் வெளியிடக்கூடும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

புதிய வரிகளைக் கொடுப்பதின் மூலம் மக்கள் தியாகத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் இப்பொழுதே எச்சரிக்கையும் செய்து இருக்கிறார். எனவே, ஒரே மாதத்தில் வெளியிடப்பட இருக்கும் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் புது வரிகள் பல இடம் பெறக்கூடும்.

அப்புது வரிகள் பணம் படைத்தவர்களைப் பாதிக்குமா அல்லது சாதாரண மக்களைப் பாதிக்குமா என்பதைக் குறித்து இப்பொழுது நிச்சயமாக எதையும் கூறுவதற்கில்லை. போடவிருக்கும் புதுவரிகள் நேரடி வரிகளாக இருக்குமா, மறைமுக வரிகளாக இருக்குமா என்பது, மே மாதத்தில்தான் விளக்கமாகும்.

ரூ. 100 கோடி கடன் எழுப்புவது என்பது இந்தியப் பேரரசிற்கு மிக மிகச் சுலபம். எளிதில் வெற்றி பெறக்கூடியது என்பதில் ஐயமில்லை.

ஆனால், இந்தியப் பேரரசு கடன் எழுப்புவதின் விளைவாக மாகாண ஆட்சிகள் பொதுமக்களிடமிருந்து கடன் பெறுவது என்பது சங்கடமாக முடியும். அவ்வகையில் மாகாண ஆட்சிகள் கடன் எழுப்புவதற்குத் தடை ஏற்படக்கூடும்.

ஏற்றுமதிகளைப் பெருக்கி இறக்குமதிகளைக் குறைத்து அன்னிய செலாவணித் தேவைகளைப் பெருக்கவேண்டும் என்ற நிதி அமைச்சரின் விருப்பமும், அவர் ஏற்கனவே எதிர்பார்த்தபடி முழு அளவில் வெற்றி பெறவில்லை. இனியாவது வெற்றி பெறுமா என்பதை இப்பொழுது திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது.

இந்தியப் பேரரசின் ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையின் காரணமாக, உள்நாட்டில் பொருள் தட்டுப்பாடும், விலை ஏற்றமும், பணவீக்கமும் கணிசமாக இருந்துவருவதை நாம் இன்று அனுபவித்துவருகிறோம். அதுமேலும் பயங்கரமாகும் என்ற உண்மையைத்தான் நிதி அமைச்சர் அளித்துள்ள வரவு-செலவுத் திட்டம் நமக்கெல்லாம் உணர்த்துகிறது.

காங்கிரஸ்காரர்கள் 43 பேர்கள்தான் !

சென்னை மார்ச் 20—

கடந்த 5 ஆண்டு காலமாக சட்டசபை உறுப்பினராக இருந்தவர்களில் 56 பேர்கள் மட்டுமே மீண்டும் அதே இடத்திற்கு வெற்றிபெற்றுள்ளனர். பழைய காங்கிரஸ் எம். எல். ஏ.க்களில் மீண்டும் இந்தத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் 43 பேர்கள் மட்டும்தான் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மாவட்டவாரியாக கட்சிகள் நிலை !

சென்னை, மார்ச் 20—

தேர்தலின் முடிவுகளை ஆராயும்போது மாவட்டங்களில் கட்சிகளின் நிலை வருமாறு :—

சென்னை :
தி. மு. கழகம் 3; காங்கிரஸ் 6; சோஷலிஸ்டு 1—மொத்தம் 10.

செங்கற்பட்டு :
தி. மு. கழகம் 1; காங்கிரஸ் 10; கா. சீ. க. 1; சுயேச்சை 1—சுயேச்சை 1—மொத்தம் 20.

வட ஆற்காடு :
தி. மு. கழகம் 4; காங்கிரஸ் 13; கா. சீ. க. 1; கம்யூனிஸ்டு 1; மொத்தம் 13.

சேலம் :
தி. மு. கழகம் 2; காங்கிரஸ் 19; கா. சீ. க. 1; சுயேச்சை 1—மொத்தம் 23.

கோவை :
காங்கிரஸ் 16; கம்யூனிஸ்டு 2; பி. சோ. 1; சோஷலிஸ்டு 1; சுயேச்சை 1—மொத்தம் 21.

நீலகிரி :
காங்கிரஸ் 2—மொத்தம் 2.

தென் ஆற்காடு :
தி. மு. கழகம் 4; காங்கிரஸ் 9; கா.சீ.க. 1; சுயேச்சை 2—மொத்தம் 19.

தஞ்சை :
காங்கிரஸ் 18; பி. சோ. 1; சுயேச்சை 1—மொத்தம் 20.

திருச்சி :
தி. மு. கழகம் 1; காங்கிரஸ் 17; கம்யூனிஸ்டு 1; சுயேச்சை 1—மொத்தம் 20.

மதுரை :
காங்கிரஸ் 17; கா.சி.க. 3—மொத்தம் 20.

இராமநாதபுரம் :
காங்கிரஸ் 7; கா. சி. க. 4; பார்வர்டு பிளாக் 2; சுயேச்சை 1—மொத்தம் 14.

திருநெல்வேலி :
காங்கிரஸ் 12; சுயேச்சை 5—மொத்தம் 17.

கன்யாகுமரி :
காங்கிரஸ் 5; சுயேச்சை 1—மொத்தம் 6.

முழு அளவில் சுயாட்சி உரிமை

சிங்கப்பூர் பிரதிநிதிகள்

லண்டன், மார்ச் 22—

சிங்கப்பூர் உள்நாட்டு சுயாட்சி நாடானதும் இந்த நாட்டுத் துறைமுகங்கள், வெளிநாட்டு வர்த்தகம், இந்தீவில் வசிக்கும் சுமார் 12 இலட்சம் மக்களின் கலாச்சாரத் தொடர்புப் பிரச்சினை ஆகியவைகள் புதிய ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளான மந்திரிகள் பொறுப்பிலும் அதிகாரத்திலும் இருக்க வேண்டும்,” என்று, சிங்கப்பூர் பிரதிநிதிகள் பிரிட்டன்-சிங்கை அரசியல் உறவு மாநாட்டில் கருத்தறிவித்தனர்.

ஆசிரியருக்குக் கடிதம் :

வரவிருக்கும் ‘புதிய கல்வித் திட்டம்’

இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் மாணவர்கள் கட்டாயமாக மூன்று மொழிகள் கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசினரால் அண்மையில் வெளியிட்ட கல்வித் திட்டத்தின்படி, இந்நாட்டு மாணவர்கள் நுனிப் புல் மேயும் ஆடுகளாக ஆக்கப் படப்போகிறார்கள்.

இந்தத் திட்டத்தின்படி உயர் நிலைப் பள்ளி மாணவர்கள்,

1. தாய் மொழி;
2. தாய் மொழியுடன் இந்தி அல்லது இந்தி அல்லாத ஏனைய இந்திய நாட்டின் மொழிகளில் ஒன்று;
3. மூன்றாவது மொழியாக ஆங்கிலம் அல்லது ஆங்கிலம் அல்லாத வெளிநாட்டு மொழிகளில் ஒன்று—

ஆக மூன்று மொழிகள் கற்க வேண்டியுள்ளது.

இதன்படி இந்தி விருப்பப் பாடமாக கண்ணுக்குத் தோற்றமளித்தாலும் கட்டாயப் பாடமாகவே உண்மையில் திணிக்கப்படுகிறது. எப்படியெனில், பெரும்பான்மையான பள்ளிகளில் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆசிரியர்களே உள்ளனர், இந்நிலையில், இந்தி அல்லாத வேறு மொழியை மாணவர்கள் எப்படிக் கற்க இயலும்? இதன்படி பல மாணவர்கள் மலையாளமோ, தெலுங்கோ எடுத்துக்கொள்ள முன்வந்தாலும் ‘ஆசிரியர் இல்லை’ என்ற காரணங்காட்டி இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கத்தான் போகிறார்கள்.

மேலும், மத்திய சர்க்கார்—மாநில சர்க்கார் வேலைத் துறைகளில் இந்தி கற்றவர்களுக்கே சலுகை தரப்படுகிறது; எனவே, எந்த மாணவனும் இந்தி தவிர வேறு மொழி கற்க விரும்பமாட்டான்!

மூன்றாவது மொழியாக எல்லோரும், உலக மொழியாகிய ஆங்கிலமே எடுத்துக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், எல்லோருக்கும் மூன்று மொழி அவசியமா? மூன்று மொழிகள் கற்கக்கூடிய திறமை எல்லா மாணவர்களுக்கும் கிடையாது. மேலும், நம் நாட்டிற்கும் வடநாட்டிற்கும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள உலக மொழியாக விளங்கும் ஆங்கிலமே போதும்.

எனவே, இரண்டாவது மொழியாக, இந்தி அல்லது வேறு இந்திய மொழிகள் கற்க விரும்பாத மாணவர்கள் ‘சிறப்புத் தாய்மொழி’ (Advanced study in the Mother Tongue) என இப்பொழுது உள்ள பாடத்தையே கற்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் தாய் மொழியில் மிகுந்த ஆர்வமுள்ள மாணவர்கள், தாய் மொழியைக் கசடறக் கற்று, தாய் மொழி வளர்ச்சிக்குத் தொண்டு செய்ய இயலும். இன்றேல், மூன்று மொழிகளையும் சரியாகக் கற்காத அரைகுறை மாணவர்களையே இத்திட்டம் உருவாக்க இயலும்.

இத்துடன், சிறப்புத் தாய் மொழியை விருப்பப் பாடமாக எடுக்க மாணவர்களைத் தூண்டும்பொருட்டு, ‘சிறப்புத் தாய் மொழி’ மாணவர்களுக்கும் இந்தி கற்றவருக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் மாநில சர்க்காரால் வழங்கப்பட வேண்டும்.

புதிதாக ஆட்சிக்கு வரப்போகும் ‘பச்சைத் தமிழர்’ ஆட்சியாளர்கள் இத்திருத்தம் செய்து, ஆட்சி மொழியாக அரியணையில் அமரப் போகும் தமிழ் மொழியை நன்கு கற்கத் தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பார்களா? கல்லூரிகளிலும், தமிழ் பயிற்சி மொழியாகும் நாள் எந்நாளோ?

சோ. ஆனந்தன்,
புதுக்கோட்டை.

ஏ. கே. கோபாலனின் ‘சத்திய சோதனை !’

“அனுபவபூர்வமாகவே, கேரள மக்கள் காங்கிரசை வெறுக்கிறார்கள் என்று பி. சோ., ஆர். எஸ். பி. தலைவர்களிடம் சொல்லி, ‘எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு குறைந்த பட்ச திட்டத்தின் அடிப்படையில் கூட்டணி சேர்ந்து காங்கிரசை எதிர்ப்போம் வாருங்கள்’ என்று கூப்பிட்டோம்; பி. சோ. கட்சி ஊழியர்களும் இதையே விரும்பினார்கள்; ஆனால் தலைவர்கள் விரும்பவில்லை.

“திட்டத்தின் அடிப்படையில் கூட்டு முன்னணி வகுக்க வராவிட்டாலுங்கூட தேர்தல் உடன்பாட்டுக்காவது வர வேண்டுமென்று கேட்டோம்; அதற்கு பிரஜா சோஷலிஸ்டுத் தலைவர்கள், தங்களுக்கு மலபாரில் 12 இடங்களையும் திரு—கொச்சியில் 60 இடங்களையும் ஆக மொத்தம் 72 இடங்களை ஒதுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.

“சென்றத் தேர்தலில், கம்யூனிஸ்டு கட்சி மட்டுமே மற்ற கட்சிகளுக்காகத் தியாகம் செய்தது; இப்போது அது முடியாது; சகலரும் விட்டுக் கொடுத்து தியாகம் செய்வோம்,’ என்றோம். பிறகு, 50 இடங்கள் கட்டாயம் வேண்டுமென்றது பி. சோ. 30 இடங்களைக் கொடுக்கத் தயாராக இருந்தோம்—சம்மதிக்கவில்லை.

“இன்று தேர்தல் முடிவுகள் தெரிந்துவிட்டன; பி. சோ.-வுக்கு எத்தனை கிடைத்திருக்கிறது? 9-தான்! மற்றவர்களை குறைவாகச் சொல்லுவதற்காக இதைச் சொல்லவில்லை; ‘பி. சோ. தன் சக்திக்குமேல் இடங்கள் கேட்டது,’ என்பதைத்தான் குறிப்பிட்டேன்”

இவ்வாறு 17-3-57-ல் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தோழர் ஏ. கே. கோபாலன் பேசியதாக ‘ஜனசக்தி’ 20-3-57 இதழ் தெரிவிக்கிறது.

தனக்குப் பாராட்டு அளிக்கப்பட்ட கூட்டம் ஒன்றில் பேசிய காங்கிரஸ் எம். பி.-யான ஆர். வெங்கட்ராமன் ‘தேர்தல் வா வா ஒரு சூதாட்டமாகிவருகிறது’ என்று குறிப்பிட்டிருக்கிறார்!

உணவு உற்பத்திக்குப் பல கோடி செலவிட்டுப் பயன் என்ன?

விலை ஏற்றத்தைத் தடுப்பதற்குதக்க நடவடிக்கை எடுக்காதது ஏன்?

மைசூர் சட்டசபையில் எதிர்க்கட்சியினர் கண்டனம்

“உணவுப் பொருள் விலை ஏற்றத்தால் ஏழை, நடுத்தர வர்க்க மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

“பல கோடி ரூபாய் உணவு உற்பத்திக்காகச் செலவிட்ட பின்னும், நியாயமான விலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காதிருப்பது மிக வருந்தற்குரியதாகும்.

“உணவுப் பொருள் விலை ஏற்றத்தைத்தடுக்க சர்க்கார் தவறிவிட்டது.

“குறித்த காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்; சர்க்கார் இதைச் செய்யத் தவறியது பெரும் கண்டனத்துக்கு உரியதாகும்”

என்று, மைசூர் மேல்(சட்ட) சபையில் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

30 இலட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

நெருக்கடி நிலைமை முற்றுகிறது

லண்டன், மார்ச் 20—

சுமார் 30 இலட்சம் கப்பல்தளத் தொழிலாளர்கள் இங்கிலாந்தில் வேலைநிறுத்தம் செய்திருப்பது, ஏற்கனவே பெரும் தொழில் நெருக்கடியை உருவாக்கிவிட்டுள்ளது.

இந்த நிலையில் தொழிலாளர் தலைவர்கள் பிரதான எஞ்சினீயரிங் தொழில்களுக்கும் கொரில்லா வேலைநிறுத்தப் போராட்டத்தை விஸ்தரிக்கப்போவதாகக் கூறியிருக்கின்றனர்.

இந்தப் போராட்டம் ஏப்ரல் 6-ந் தேதிவரை நீடிக்கும் என்றும், அப்போதும் 10 சதவிகித சம்பள உயர்வுக் கோரிக்கை ஏற்கப்படவில்லையானால் நாடு முழுதும் உள்ள எஞ்சினீயரிங் தொழில்கள் முடங்கும் வகையில் பெரும் வேலைநிறுத்தம் நடைபெறும் என்றும் கூறியுள்ளனர்.

சம்பளம் வாங்க மறுப்பு

குடந்தை கிராம அதிகாரிகள் போராட்டம்

துக்கச் சின்னம் அணியவும் முடிவு

கும்பகோணம், மார்ச் 19—

இங்கு அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட முடிவுப்படி, பல கிராமங்களைச் சேர்ந்த கிராம கர்ணங்களின் பிப்ரவரி மாத சம்பளத்தைப் பெற மறுத்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

மேலும், ஆடுதுறை வட்ட கிராம அதிகாரிகள் சங்கத்தவர், 'ஜமாபந்தி' காலத்தில் 'சர்க்கார் கிராம அதிகாரிகளைக் கவனிக்கவில்லை,' என்று எழுதிய துக்கச் சின்னங்களை அணிந்து கொள்வது என்றும் முடிவு செய்திருக்கின்றனராம்.

'சம்பள விகிதங்களை ஒழுங்குபடுத்துக'

ஆந்திர என்.ஜி.ஓ.-க்கள் கோரிக்கை

ஐதராபாத், மார்ச் 20—

ஆந்திரா, மற்றும் தெலிங்கானு பிரதேசங்களில் பணியாற்றும் சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிசெய்யுமாறு 'என். ஜி. ஓ.'-க்கள், ஆந்திரப் பிரதேச சர்க்காரை வற்புறுத்தியுள்ளனர்.

மேலும், இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள பஞ்சப்படி உயர்வு போதுமானது அல்ல என்றும், உடனடியாக சம்பளம், பஞ்சப்படி முதலியன நியாயமான அளவே உயர்த்தப்படவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

ஓய்வு பெறும் சேவகருக்கு தேநீர் விருந்து தந்தார் மாவட்ட நீதிபதி

பெல்லாரியில் முன்மாதிரியான நிகழ்ச்சி

பெல்லாரி, மார்ச் 20—

வேலையிலிருந்து ஓய்வு பெறும் வேலைக்காரர் ஒருவருக்கு மாவட்ட நீதிபதி ஒருவர் தேநீர் விருந்து தந்து, பாராட்டு விழா நடத்தி கௌரவித்துள்ள முன்மாதிரியான சம்பவம் இங்கே நடைபெற்றிருக்கிறது.

32 ஆண்டுகளாகப் பணிபுரிந்துவிட்டு ஓய்வு பெறும் கே. நாகப்பா என்ற நீதிமன்ற சேவகர் ஒருவருக்கு மாவட்ட செஷன்ஸ் நீதிபதியான கே. பீமய்யா என்பார் 17-ந் தேதியன்று தேநீர் விருந்து ஒன்று நடத்திப் பாராட்டினர்.

சேவகருக்கு, நீதிபதி மாலை அணிவித்து மகிழ்ந்தார்.

சேவகரின் கடமையுணர்ச்சியை வெகுவாகப் பாராட்டிப் பேசினர், நீதிபதி!

வி. இராமச்சந்திரன் என்ற மற்றொரு மாவட்ட நீதிபதி, நாகராஜ் என்ற மாவட்ட முனிசீப், விஜயராவ் என்ற முதல் வகுப்பு நீதிபதி ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டிருக்கின்றனர்

வேலையில்லாத் திண்டாட்டத்தால் வேதனையுறுகின்றனர்!

ஆட்சியின் காவலரே கூறுகிறர்!

எர்ணுகுளம், மார்ச் 20—

"வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பொதுவான சிக்கலாகும்; படித்தவர்கள் மட்டுமல்லாது படிக்காதவர்களிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. இந்தியாவில் பெரும்பாலான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் துயரடைகின்றனர்,"

என்று, கோரா மாநிலக் கவர்னர் டாக்டர் பி. இராமகிருஷ்ண ராவ், படித்த வேலையில்லாதாருக்காக நிறுவப்பட்டுள்ள வேலை நிலயத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் 326 பேர் டிபாசிட் இழந்தனர்!

சென்னை, மார்ச் 20—

தேர்தலில் போட்டியிட்டுப் பதிவான வாக்குகளில் மூன்றில் ஒரு பங்கு பெருதவர்கள் 326 பேர்கள். இவர்கள் மொத்தமாக ரூபாய் 91,500 பறிகொடுத்துள்ளனர்.

டிபாசிட் தொகையை 18 கம்யூனிஸ்டுகள், 40 தி. மு. க.-வினர் உட்பட 326 பேர் இழந்துள்ளனர்.

அனுதாபம்

3—3—57 காலை 3 மணிக்கு வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் முன்னுள் பொருளாளர் தோழர் எஸ். எஸ். இஸ்மாயில் இயற்கை எய்தியதையொட்டி அவரது குடும்பத்தினருக்கு படிப்பகத் தோழர்களும், 3-வது வட்ட தோழர்களும் அனுதாபம் தெரிவித்துக்கொள்கின்றனர்.

நன்றியறிவிப்பு

சென்னை ஆயிரம்விளக்குத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட என்னை பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுத்த வாக்காளப் பொது மக்கள் அனைவருக்கும் எனது வெற்றிக்கு இடைவிடாது பாடுபட்ட கழகத் தோழர்கள்—பொது மன்றங்கள்—கழக ஆதரவாளர்கள்—நண்பர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியையும், பணிவன்பான வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் குறிப்பாக ஆயிரம்விளக்குத் தொகுதி மக்கள் நலனுக்கும்—பொதுவாக தமிழ் நாட்டு மக்கள் முன்னேற்றத்திற்கும் சட்ட சபையில் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

அன்பன்,

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

சென்னை சட்டசபைத் தேர்தலில் தேனித் தொகுதியில் இரவு பகல் எனப்பாராது எனக்காக உழைத்த நண்பர்களுக்கும், தி. மு. கழக ஊழியர்களுக்கும், மாற்றுக் கட்சித் தோழர்களுக்கும், பல்லாயிரக் கணக்கான பொதுமக்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசியலிலே தெளிவும் மனத் தூய்மையும் அற்ற சில தீய சக்திகளின் குறுக்கீடு காரணமாக, எனக்கு வெற்றி கிடைக்காமற் போனாலும், 31,404 வாக்காளப் பெருமக்கள் எனக்கு வாக்களித்து என்னைப் பெருமைப் படுத்தியுள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் என் உளம்நிறைந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. இந்த மாபெரும் மக்கள் சக்தியின் நேசத்தையும் பாசத்தையும் நான் மறக்கமாட்டேன்—இழக்கமாட்டேன். தொடர்ந்து தேனித் தொகுதி மக்களுக்கும் நான் பிறந்த பொன்னாட்டுக்கும் தூய பணி ஆற்றுவேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

எஸ். எஸ். ராஜேந்திரன்

★

லால்குடித் தொகுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட எனக்கு பெருவாரியான வாக்குகள் அளித்த வாக்காளர்களுக்கும், இரவும் பகலும் இடைவிடாது பாடுபட்ட கழக ஊழியர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்

அ. பெ. தருமலிங்கம்

★

வாணியம்பாடித் தொகுதியில் நடைபெற்றத் தேர்தலில் எனக்குப் பெருவாரியாக வாக்களித்த வாக்காளர்களுக்கும், அருந்தொண்டாற்றிய முஸ்லீம் அன்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், குறிப்பாக ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கும் என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

எம். பி. வடிவேலு

★

சென்னை சட்டசபை விருத்தாசலம் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் என் வெற்றிக்காக ஒத்துழைத்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், இயக்க அன்பர்களுக்கும், வாக்காளர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம்.

அன்பன்

எம். செல்வராஜ்

திருச்சி பாராளுமன்றத்தொகுதியில் தி. மு. க. அபேட்சகனுகப் போட்டியிட்ட எனக்கு எதிர்ப்பு சக்திகளைத் தாங்கிக் கொண்டு, பொருட் செலவையும் பாராது எல்லாவகையிலும் ஒத்துழைப்புத் தந்து அல்லும் பகலும் அயராது பாடுபட்ட கழகத் தோழர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், நண்பர்களுக்கும், தாய்மார்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு மேலும் அயராது கழகம் வளரப் பாடுபடுவேன்.

அன்பன்

எம். எஸ். மணி

★

சென்னை சட்ட சபைத் தேர்தலில் பெரம்பலூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில் (பொது) தி. மு. கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து, நல்ல முறையில் இரவு பகல் என்று பாராமல் பணியாற்றி பெருவாரியான வாக்குகள், வாங்கித் தந்த இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலில் தோல்வி கண்டிருந்தாலும் தொடர்ந்து மக்களிடம் பணியாற்றி வருவேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

அரு. ஆதிமூலம்

★

சென்னை சட்டசபைக்கு திருவாடானைத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட எனக்கு பெருவாரியான வாக்குகள் தந்து ஆதரவளித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், ஆதரித்துப் பணிபுரிந்த கழகத் தோழர்கள் — ஆதரவாளர்கள் —நண்பர்கள்—பொது நிறுவனங்கள் ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தோல்வியடைந்தாலும், என்றும் பொதுமக்களின் தொண்டனுகப் பணிபுரிவேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

இராம. வெள்ளையன்

★

விழுப்புரம் தொகுதியில் சென்னை சட்டசபைக்கு தி.மு. கழகச் சார்பில், தேர்தலில் போட்டியிட்ட என்னை ஆதரித்த வாக்காளர் பொதுமக்களுக்கும் ஆர்வத்தோடு வேலை செய்த தி. மு. கழகத் தோழர்களுக்கும் மற்றும் என் மீது அன்பு கொண்டுள்ள ஆதரவாளர்களுக்கும் எனது அன்பான வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தேர்தலில் என்னை ஆதரித்த 24,200 வாக்காளர் பெருமக்கள் அவ்வளவு பேரும் நம் கழகத்தின் திட்டம், நோக்கம் இவைகளை ஆதரிக்கிறவர்களும் கழகத்தின் சார்பில் முன்வந்து போட்டியிட்டதற்காக என்மீது அன்பு கொண்டவர்களும் கழகக் கொள்கைகளை உணர்ந்து வாக்களித்தவர்கள்தான்.

நம்மை எதிர்த்த ஆளும் கட்சி அபேட்சகர் வாக்குகளைப் பெற கையாண்ட தவறான முறைகள் பல பற்றிய விளக்கங்களை நான் குறிப்பிடவேண்டிய அவசியமில்லாமலே பொது மக்கள் இன்னும் பேசிக்கொண்டிருப்பதை நாம் கேள்விப்படுகிறோம். எதையும் தாங்கும் உளங்கொணடவர்கள் நாம். எண்ணிக்கையில் சொற்பம் 800 வாக்குகளின் வித்தியாசத்தினல் நம் தேர்தலின் முடிவு பாதகமாய் முடிந்ததைக்கண்டு துயரத்தில் ஆழ்ந்துள்ள அன்பர்கள் ஆறுதல்கொள்ளவேண்டிக்கொள்ளுகிறேன். உணர்ச்சிவயப்பட்டு ஆத்திரம் தாங்காது கதறும் கழகத் தோழர்கள் அமைதிகொள்ள வேண்டுகிறேன். இத்தேர்தலின் முடிவினுல் நம் கழகம் பொதுமக்களை தட்டிக்கிளப்பி எதிர்கால வெற்றிப் பணிக்கு ஆளாகியுள்ள ஓர் பெரும் பயனைப் பெற்றிருக்கிறோம் என்ற உண்மையை உங்களுக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த வெற்றிதான் நம் குறிக்கோள். அதை அடைந்துவிட்டோம். இந்த வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அன்பன்,

எம். சண்முகம்

ஆந்திர மாநில வரவு-செலவுத் திட்டம்

5 கோடி ரூபாய்க்கு மேல் துண்டு விழுகிறது

ஐதராபாத், மார்ச் 20—

புதிய ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதல் வரவு-செலவுத் திட்டத்தை நிதி மந்திரி காளா வெங்கட்ராவ் அவர்கள் சட்டசபையில் தாக்கல் செய்தார்.

இதன்படி, ரூ. 5,29,00,000 கோடி துண்டுவிழுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வருமானம் 1957—58-ம் ஆண்டில் ரூ. 50,23,00,000 என்றும், செலவு ரூ. 55,53,00,000 என்றும் திட்டம் கூறுகிறது.

துண்டு விழும் தொகையை புதிய வரிகள் மூலம் சரிகட்டிக் கொள்ளலாம் என்றும், இது, மே திங்களில் புதிய சர்க்கார் சமர்ப்பிக்கும் திட்டத்தின் போது கணக்கிடப்பட வேண்டியது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

★

சர்க்கார் ஊழியர்கள், ஆசிரியர்களுக்குப் பஞ்சப் படி உயர்வு!

ஆந்திர மந்திரி அறிவிப்பு

ஆந்திர 'என். ஜி. ஓ.'-க்களில் ரூ. 100.க்குக் குறைவாக ஊதியம் பெறுவோருக்கு ரூ. 6 பஞ்சப் படி உயர்வு தருவது என்று முடிவு செய்திருக்கிறதாம், ஆந்திர சர்க்கார்!

வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த மந்திரி காளா வெங்கட்ராவ், இந்த அறிவிப்பைத் தந்திருக்கிறர்.

'இந்தப் பஞ்சப்படி உயர்வு, சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

காந்தியாருக்குப்பிறகு!

டிரான்ஸ்வால் நீதிமன்றம் அனுமதித்த இந்தியர்

பிரிடோரியா, மார்ச் 20—

டிரான்ஸ்வால் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவுசெய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டாவது 'இந்தியர்' இப்ராகிம் அப்துல்கனி என்பார்தானும்!

முதல் உலக யுத்தத்திற்கு முன்பாக காந்தியார்தான் இங்கு வழக்காட அனுமதிக்கப்பட்டவராவார்.

29 வயதான அப்துல்கனி, டிரான்ஸ்வாலில் பிறந்தவர்; லண்டனில் சட்டம் பயின்று பாரிஸ்டரானவர்.

அன்பளிப்பு

திருச்சி மாவட்டம் ஆனந்தவாடி தோழர் எஸ். ஆறுமுகம் (தமிழர் உணவு விடுதி) அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

மனித வேட்டை என்றுதான் நிற்குமோ?

விடுதலை வேட்கை என்றுதான் தணியுமோ?

அல்ஜீரிய மக்கள் தீட்டும் வீரமிக்க சுதந்திர காவியம்

விடுதலை வேட்கை, அல்ஜீரியாவின் புதல்வர்களில் நூற்றுக் கணக்கானோரைப் பலிகொடுத்த பின்னும் தணிந்தபாடில்லை.

உலகிலேயே இதுவரை நடைபெற்றில்லாத வீரமும் தியாகமும் பொங்கிவழியும் மகத்தானதோர் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள அல்ஜீரிய மக்களின் உள்ள உறுதியை எடுத்துரைக்க உதாரணமே இல்லை எனலாம்.

ஒவ்வொரு இருபத்து நான்கு மணி நேரத்திற்கும் அங்கு சுட்டு வீழ்த்தப்படும் விடுதலைப் போர் வீரர்களின் எண்ணிக்கை பற்றிய செய்தி, நம் நெஞ்சைத் திடுக்கிட வைக்கிறது—உலுக்குகிறது!

போர்வழி நடக்கும் அவ்வீரர்கள், உடன்வந்தோர் நூற்றுக்கணக்கில் சாய்க்கப்படுவதைக் கண்ணால் கண்டுகொண்டே தொடர்ந்து சுதந்திரத் தாகம் தணித்துக் கொள்ளப் பயணமிடுவதைக் காணும்போது, அவர்களது தியாக உள்ளத்தின் உரத்தை என்னென்று கூறுவது?

மார்ச் 20-ந் தேதி, அல்ஜீரிய நகரிலிருந்து தரப்படும் செய்திப்படி கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியர்கள் 100 தீவிர வாதிகளைக் கொன்று குவித்ததாகக் கணக்குத் தந்திருக்கின்றனர்.

ஏகாதிபத்தியம் நடத்தும் இந்த மனித வேட்டை என்றுதான் நிற்குமோ? அல்ஜீரிய மக்களின் விடுதலை வேட்கை என்றுதான் தணியுமோ?

வெற்றி ஊர்வலங்கள்

23-3-57 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, சென்னை சட்டசபைத் தேர்தலில் ஆயிரம் விளக்குத் தொகுதியில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி வெற்றி பெற்றதைப் பாராட்டி, 34-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நுங்கம்பாக்கம் இராமநாயக்கன் தெருவிலிருந்து ஓர் ஊர்வலம் புறப்படும்; தோழர்கள் பெரும் அளவில் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

* * *

25-3-57 மாலை 4-30 மணியளவில், சென்னை 37-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையிலிருந்து ஓர் வெற்றி ஊர்வலம் நடைபெறும்; ஊர்வலத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களும் கலந்துகொள்வார்.

தூளை கே. வி. கே. சாமி நினைவு படிப்பகப் பொதுஉறுப்பினர்கட்கு

24-3-57 காலை 9 மணிக்கு சென்னை-தூளை கலியாண மேஸ்திரி தோட்டம் எண் 31, மேற்படி படிப்பக மனையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அந்நிய நாடுகளுக்கு எகிப்து அறிவிப்பு

கப்பல் போக்குவரத்துக்கு சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதும் கப்பல் கடற் சுங்கக் கட்டணத்தை எகிப்திய சூயஸ் கால்வாய் தேசியக் கம்பெனியிடமோ அல்லது அதன் பிரதிநிதிகளிடமோ முன்னதாகச் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கும் சுற்றறிக்கையை கெய்ரோவிலுள்ள எல்லா அந்நிய நாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

எகிப்தில் தேர்தல்

சீக்கிரமே எகிப்திய நாட்டில் தேர்தல்கள் நடைபெறும் என்றும், தேசிய சட்டசபை ஒன்று ஜூலைத் திங்களில் அமையும் என்றும் கூறப்படுகிறது.

குடியரசுத் தலைவர் நாசர் தலைமையில் இரண்டு மணி நேரம் மந்திரி சபைக் கூட்டம் நடைபெற்றதாகவும், அதற்குப் பிறகு இந்தத் தகவல் பத்திரிகையாளருக்குத் தரப்பட்டதாகவும் தெரிகிறது.

குடியரசுத்தலைவர் ஆட்சிபிரகடனம்

மேற்கு பாகிஸ்தானில் 'மீண்டும் அரசியல் குழப்பம்

கராச்சி, மார்ச் 21—

மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

காரணம் என்ன?

இப்போது ஒரே மாகாணமாக இருக்கும் மேற்கு பாகிஸ்தான் முன்பு ஆறு மாகாணங்களாக இருந்தது; எழுந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மத்திய சர்க்கார் ஆறு மாநிலங்களையும் இணைத்து ஒரே மாகாணமாக்கினர்.

இப்போது, இந்த 'ஒரு மாகாண ஏற்பாடு' நடைமுறையில் சிறந்ததாகத் தெரியவில்லை என்று எதிர்க் கட்சியினர், சட்டசபையில் கூறியிருக்கின்றனர்.

கண்டனம்

காலையில் சட்டசபை கூடிய போது, டாக்டர் கான்சாகிப் மந்திரி சபையின்மீது எதிர்க் கட்சித் தலைவர் (முஸ்லீம் லீக்) சர்தார் பகதூர்கான் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தார்; ஆனால் சபைத் தலைவர் ஓட்டெடுப்புக்கு அனுமதிக்கவில்லை.

கட்சி மாறினர்

இந்த நிலையில், பல 'ரிபப்ளிகன் கட்சி'யினர் கட்சி மாறினர்; எதிர்க் கட்சியினர், சபையில் தங்களுக்குப் பெரும்பான்மை இருப்பதாக அறிவித்தனர்; டாக்டர் கான் மந்திரி சபை ஊசலாடிற்று!

காலையில் நடைபெற்ற இந்தக் குழப்பங்களைக் கண்ட குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மிர்ஜா, எந்த வித எச்சரிக்கையுமின்றி மாலையில் தனது ஆட்சியை மாநிலத்தில் பிரகடனம் செய்துள்ளார்.

அண்ணா

மற்றும்

வெற்றி பெற்றோருக்குப் பாராட்டு

24—3—57 மாலை 6-மணிக்கு காஞ்சி - ஒலிமுகம்மதுபேட்டையில், இஸ்லாமியப் படிப்பகச் சார்பில் தோழர் எஸ். ஜே. முகம்மது அலி தலைமையில், பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற அண்ணா, மற்றும் தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரைப் பாராட்டித் தோழர்கள் பலர் பேசுவர்.

★

25—3—57 மாலை 6 மணிக்கு, உத்திரமேரூர் பஸ் ஸ்டாண்டு அருகில், உத்திரமேரூர் பாராட்டுக் குழுவினர் சார்பில், தோழர் எம். சண்முகம் அவர்கள் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா, மற்றும் தோழர்கள் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, என். சிவராஜ், வி. கே. இராமசாமி, எல்லப்பன் ஆகியோரைப் பாராட்டிப் பல தோழர்கள் பேசுவார்கள்.

பஷானி விலகினார்

மீண்டும் நெருக்கடியா?

டாக்கா, மார்ச் 21—

அவாமி லீக் தலைவரான மௌலானா பஷானி, தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டுவிட்டதாக இங்குள்ள இரு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஷானி இதை உறுதி செய்யாதபோதிலும் அவருக்கு நெருக்கமானவர்கள் இதனை உறுதி செய்துள்ளனராம்.

இரும்பு மனிதர் அல்ல!

'இளகிய மனம் படைத்தவர்'

பம்பாய், மார்ச் 20—

காங்கிரசாரால் மறக்கப்பட்டுவிட்ட காலஞ்சென்ற படேல், 'இரும்பு மனிதர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவாரல்லவா?

ஆனால்...!

கவர்னரான பிரகாசா, தனக்கு இது பிடிக்கவில்லை என்று கூறினாராம்!

"பிரான்சு நாட்டோடு கொடிய யுத்தங்களில் ஈடுபட்ட பிஸ்மார்க்கைத்தான் 'இரும்பு மனிதன்' என்று அழைக்கிறார்கள்; படேல் அது போன்று எதையும் செய்ததில்லை; அவர் மலர் போன்ற மென்மையானவரே!"

என்று, கவர்னர் பிரகாசா பம்பாயில் உள்ள தேசிய விளையாட்டுச் சங்கப் பூங்காவில் படேலின் உருவச் சிலை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியிருக்கிறார்.

சென்னை 27-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

24-3-57 காலை 10 மணிக்கு எடப்பாளையம் அனுமந்தராயன் கோயில்தெரு, 32-ம் எண் மனையில் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது பலமுக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இந்திய எஞ்சினியர்களுக்குப் பயிற்சியளிக்க திட்டம்

அமெரிக்காவுடன் இந்தியா செய்துகொண்டுள்ள ஒப்பந்தம்

புதுடில்லி, மார்ச் 22—

அமெரிக்காவில் இரும்பு எஃகுத் தொழில் நுணுக்கத்தில் 900 முதல் 1000 பேர் வரையிலும் இந்திய எஞ்சினியர்கள் ஐந்தாண்டுக் காலம் வரையில் பயிற்சிபெற இந்திய அரசாங்கம், போர்டு நிறுவனம், அமெரிக்க எஃகுத் தொழில் முதலியவைகளுக்கிடையே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

இந்திய அரசாங்கம் எஞ்சினியர்களின் பிரயாணச் செலவையும், போர்டு நிறுவனம் அவர்கள் வாழ்க்கைச் செலவையும் அளிக்கும்; அமெரிக்க எஃகுத் தொழில் பயிற்சி வசதிகளை அளிக்கும்.

உருக்குத் தொழில் நுட்ப சிப்பந்திகளுக்கு பயிற்சி

ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இந்திய எஞ்சினியர்களாம்

புதுடில்லி, மார்ச் 21—

இரும்பு—உருக்கு உற்பத்தியில் பயிற்சி பெறுவதற்காக, இந்தியா இதுவரையில் 91 எஞ்சினியர்களை ரஷ்யாவுக்கு அனுப்பியுள்ளது என்றும், இவர்களைத் தவிர 80 எஞ்சினியர்கள் மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டனரென்றும் வேறெந்த நாட்டுக்கும் எஞ்சினியர்கள் எவரும் இதுவரை பயிற்சிக்கு அனுப்பப்படவில்லையென்றும், கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் ராஜ்யசபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கு முதலில் ஆறுமாத காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், உடன்படிக்கையின் மீது இக்காலத்தை மேலும் நீடித்துக்கொள்ளலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

****

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர் தனிக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிக் கூட்டம் ஒன்று 31—3—57 ஞாயிறு காலை 10-மணிக்கு, சென்னை-இராயபுரம் 'அறிவக'த்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

தலைநகரில் பாராட்டுக் கூட்டம்

★

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள அண்ணா அவர்களுக்கும், மற்ற எல்லாத் தோழர்களுக்கும் 31-3-57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

ஆங்கிலோ - அமெரிக்கப் பேச்சுக்கள்

மாக்மில்லன்-ஐசனோவர் சந்திப்பு

ஹாமில்டன் (பெர்முடா) மார்ச் 20—

ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன், கப்பல் மூலம் வந்த அமெரிக்கத் தலைவர் ஐசனோவரை வரவேற்றிருக்கிறார்.

இரு தலைவர்களும் இங்கு கூடிப் பேசவிருக்கின்றனர் என்பது தெரிந்ததே.

ஆட்டிவைப்போரைக் காண ஆடும் பதுமைகள்!

மாஸ்கோவில் காதர் கோஷ்டி

ஐனோஸ் காதர் தலைமையில் ரஷ்யாவின் கைப்பொம்மைகளான ஏழு ஹங்கேரியத் தலைவர்கள், தங்களை ஆட்டிவைக்கும் ரஷ்யத் தலைவர்களைக்காண மாஸ்கோ சென்றுள்ளனராம்.

வரவேற்றனர்

இந்தப் 'பொம்மை'களை வரவேற்க புல்கானின், குருஷ்சேவ், மாலடோவ், வராஷிலோவ், மாலன்கோவ் ஆகிய கிரெம்ளின் பெரியவர்கள் விமான நிலையம் வந்திருந்தனராம். புல்கானின் வரவேற்பு இதழும் வாசித்தளித்தாராம்.

எசமானர்களே!

அண்மையில் ஹங்கேரியில் நடைபெற்ற சம்பவங்களின் போது எங்களுக்குப் பதவி தந்த எசமானர்களே—என்று கூறுவதை; 'நீங்கள் எங்களுக்குச் செய்த நன்றியை மறக்கமாட்டோம்' என்று கூறினாராம் காதர்!

நண்பர்களே!

'ஹங்கேரி மக்களின் உண்மையான நண்பர்கள் ரஷ்யர்களே,' என்றும் வாயாரப் புகழ்ந்தாராம், காதர்!

'பிரிக்க முடியாது'

'எந்தச் சக்தியானாலும் சோஷலிஸ்டு முகாமில் உள்ள மக்களைப் பிரிக்கமுடியாது' என்றாராம், அவர்!

பிசின்போட்டு ஒட்டுவராம்!

'மாஸ்கோவில் நாங்கள் நடத்தும் பேச்சுக்கள் ரஷ்யாவிற்கும்—ஹங்கேரிக்கும் உள்ள உறவைப் பலப்படுத்தும்' என்றும் அவர் கூறினாராம்!

டாக்டர் சேது பிள்ளைக்கு பாராட்டு விழா

சென்னை பல்கலைக் கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம்பெற்ற தமிழறிஞர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களைப் பாராட்டி சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் 22-3-57 அன்று பல்கலைக் கழக மண்டபத்தில் விழா ஒன்று நடத்துவர்.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்குவார். சேதுப்பிள்ளை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.